Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 08    திருவள்ளுவர் ஆண்டு 2023    புரட்டாதி 12    (28 - 09 - 1992)    திங்கட்கிழமை    ஓசை 223

## பாவனைக்கு உதவாத இறைச்சி கைப்பற்றி அழிக்கப்பட்டது

பரிசோதனைக்கு உட்படுத்தப்படாது யாழ். மாநகர இறைச்சிக்கடைகள் இரண்டில் வைத்து விற்பனை செய்யப்பட்ட மனித பாவனைக்கு உதவாத இறைச்சி கைப்பற்றி அழிக்கப்பட்டது நேற்று யாழ். மாநகர இறைச்சிக் கடைகளில் சோதனைகளை மேற்கொண்ட யாழ் மாநகர உணவுப் பரிசோதகர் தலைமையிலான குழு இவ் இறைச்சியை கைப்பற்றி அழித்தது இவ் இறைச்சி யாழ் மாநகர கொல்களத்தில் வைத்து வெட்டப்படாமலும், சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது அண்மைக் காலமாக பழுதடைந்த இறைச்சி, நோய்வாய்ப்பட்ட மிருகங்களின் (4ஆம் பக்கம் பார்க்க)

## மருந்துக்கு தடை

சுகாதாரம் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் பிளான்-லிக்னோசெயின் என்னும் மருந்தின் உபயோகத்தைத் தடை செய்துள்ளார்.

நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளில் பாவனையிலிருக்கும் இந்த மருந்து வகையை மீளப் பெறுமாறு கடந்த புதனன்று நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் அனைத்துப் பிரதேச சுகாதார திணைக்கள அதிகாரிகளை பணித்துள்ளார்.

# ராணுவத்தில் கட்டுப்பாடு சீர்குலைவு

# ஒழுக்கத்தை பேண தளபதி கட்டளை

## மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன சீர்குலைந்துள்ளதாகவும் அதன் காரணமாக இராணுவத்திற்குள்ளும் வெளியிலும் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதன் காரணமாக இராணுவத்தினர் அதற்குரிய விதிமுறைகளை சரிவரக் கடைப்பிடிக்கவேண்டும் எனவும், மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்னா சகல இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

அண்மைக்காலமாகமாகவிடுதலைப் புலிகளுடனான போரில் பல பின்னடைவுகளையும் பெரியளவினதான உயிரிழப்பையும் தொடர்ந்து இராணுவத்திற்குள் ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றில் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டாம்கட்டஈழப்போர் ஆரம்பித்த வேளை அவசர அவசரமாகத் திரட்டப்பட்ட சிப்பாய்கள் போரின் கடுமையைத் தாக்குபிடிக்க முடியாது மிகவும் மனச்சோர்வும், விரக்தியும்அடைந்துள்ளதாகவும், அதிகாரிகளின் கட்டளைகளுக்கு பணிந்து நடக்க மறுத்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இராணுவ அதிகாரிகள் கடுமையாக வற்புறுத்தும் போது இராணுவத்தில்இருந்து ஓடுவோர்தொகை அதிகரிப்பதாகவும் தெரிய வருகின்றது இவ்வாறு தப்பி செல்பவர்கள் சிலர் ஆயுதங்களுடனேயே ஓடிவிடுவதாகவும், இதனால் சமூக விரோதச் செயல்கள் நாட்டில் அதிகரிப்பதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில், இராணுவத்தில் ஒழுங்கைக் கடைப்பிடிக்க கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவ தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்ணா சகல இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இராணுவ சட்ட திட்டங்களையும், நடைமுறைகளையும் கடுமையாக அமுல் செய்யவேண்டும் எனவும் இதனை மீறி செயற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இரத்மலானை கொள்ளை

## சந்தேக நபர் கைது ஆயுதம் மீட்பு

(கொழும்பு)

இரத்மலானையிலுள்ள புகையிரத வேலைத்தள கொள்ளை தொடர்பாக ஜே.வி.பி சந்தேக நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கம்பஹாவில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும், 50 சுற்றுத் தோட்டாக்களும், 5,000 ரூபா ரொக்கப் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 4 இராணுவம் உட்பட 24 பேர் காயம்

(கொழும்பு)

அம்பாறை இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இராணுவ அணிவகுப்பின் போது போலிக் குண்டு என்று கருதி நிசக் குண்டு ஒன்றை வெடிக்க வைத்ததால் இருபத்தாறுபேர் படுகாயமடைந்து உள்ளனர் இவர்களில் நான்குபேர் படையினர், ஏனைபேர் படையினரின் உறவினர்கள் ஆவர்.

# கிழக்கில் போரிடும் படையினருக்கு போதிய ஆயுதங்கள் இல்லையாம்

## - அநுரா கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவ வீரர்களைத் தவிர ஏனைய பகுதிகளில் குறிப்பாக கிழக்கில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினருக்கு போதிய ஆயுதங்களும் வெடி மருந்துகளும் இல்லையென நம்பகமான இராணுவ வட்டாரங்களில் இருந்து தங்களுக்கு தெரிய வருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. யான அநுரா பண்டார நாயக்கா தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீது பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே ... விடும் என்று பிரதமர் டி. பி. விஜயதுங்கா யூன் மாதம் முதலாம் திகதி கூறியிருந்தார். இரண்டு மாத காலத்துக்கும் கூடுதலான காலம் இப்போது கடந்து விட்டது.

அவர் இவ்வாறு கூறியதற்குப் பின்னரேயே டென்சில் கொப்பேகடுவ உட்பட உயர் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது இன்னமும் பிரதமர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியில்தொடருகிறார் அத்துடன் இப்போது பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கிறார். இன்னமும் அவர் தனது அந்த கூற்று பற்றி எதுவும் கூறவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டவிதிகள் வட-கிழக்கை கட்டுப்படுத்தா

### - பந்துல குணவர்த்தன

[கொழும்பு]

சிறிலங்கா அரசின் அவசர ...

## ராணுவத் தலைமைப்பீடம் மீது கனிஷ்டஅதிகாரிகள் அதிருப்தி

சிறிலங்கா இராணுவத்தின் தலைமைப்பீடத்தினருக்கும் கனிஷ்டநிலை இராணுவ அதிகாரிகளுக்குமிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக 'லக்தீப' பத்திரிகை ஆசிரியர் வினிஎட்டிகொட தெரிவித்தார்

அண்மையில் அம்பாறையில் பயிற்சி பெற்று வெளியேறிய இராணுவத்தினரின் அணிவகுப்பு ...

தினரை வலுக்கட்டாயமாக படையில் சேர்க்க முயற்சித்தல்,

மனித உரிமை மீறல்களுக்காக இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை

எம்பிலிப்பிட்டியவில் மாணவர் கொல்லப்பட்டமை ...

## காயாங்கேணி அதிரடி; உயர் மட்ட விசாரணை

[கொழும்பு]

... லான விசாரணை மேற்கொள் ...

# கிழக்கில் போரிடும் படையினருக்கு போதிய ஆயுதங்கள் இல்லையாம்

## - அநுரா கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவ வீரர்களைத் தவிர ஏனைய பகுதிகளில் குறிப்பாக கிழக்கில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினருக்கு போதிய ஆயுதங்களும் வெடி மருந்துகளும் இல்லையென நம்பகமான இராணுவ வட்டாரங்களில் இருந்து தங்களுக்கு தெரிய வருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி.யான அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீது பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர் இன்னும் இரண்டு மாத காலத்தில் முடிவடைந்து விடும் என்று பிரதமர் டி. பி. விஜயதுங்கா யூன் மாதம் முதலாம் திகதி கூறியிருந்தார். இரண்டு மாத காலத்துக்கும் கூடுதலான காலம் இப்போது கடந்து விட்டது.

அவர் இவ்வாறு கூறியதற்குப் பின்னரேயே டென்சில் கொப்பேகடுவ உட்பட உயர் அதிகாரிகள் பலர் கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. இன்னமும் பிரதமர் பாதுகாப்பு ஊராஜாங்க அமைச்சர் பதவியில் தொடருகிறார் அத்துடன் இப்போது பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கிறார். இன்னமும் அவர் தனது அந்த கூற்று பற்றி எதுவும் கூறவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டவிதிகள் வட-கிழக்கை கட்டுப்படுத்தா

### - பந்துல குணவர்த்தன

[கொழும்பு]

சிறிலங்கா அரசின் அவசரகாலச் சட்டவிதிகள் ஒரு போதும் வடக்குக் கிழக்கை கட்டுப்படுத்தப் போவதில்லை அதனை விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் ஒரு போதும் கடைப்பிடிக்க மாட்டார். தெற்கைக் கட்டுப்படுத்தவே அரசு அவசரகாலச்சட்ட விதிகளை அமுலுக்குக்கொண்டு வந்தது என பந்துல குணவர்த்தன எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் அவசரகாலச் சட்ட விதிகள் மூலம் நாட்டை ஆட்சிசெய்வது பாஸிஸ முறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை அகதிகளை திருப்பி அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள அகதிகளில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை மீண்டும் அம் மாவட்டத்திற்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாக தெரியவருகின்றது. கொழும்பில் இருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணத்தார்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முந்நூற்றைம்பது கொழும்பில் தங்கியுள்ள பேர் மீள அனுப்பிவைக்கப் படவுள்ளனர்.

## முஸ்லிம்களின் தனித்துவம் அங்கீகரிக்க பொது அமைப்பு

### - முஸ்லிம் காங்கிரஸ் முயற்சி

வடக்கு - கிழக்கு பகுதியில் வாழும் முஸ்லிமகளின் தனித்துவத்தை அங்கீகரிக்கும் முகமாக பொது அமைப்பு ஒன்றை நிறுவுவது பற்றி முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது. நேற்று முன்தினம் முஸ்லிம காங்கிரசுக்கும தமிழ் அரசியல் குழுக்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுககளின் போது இது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

# சிறைவாசம் அனுபவிக்கவும் தயங்கப்போவதில்லை

## - சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

"இதுவரை காலத்திலும் நான் சிறைத்தண்டனையைப் பெற்றதில்லை. நான் மட்டுமன்றி எனது கட்சியினரும் சிறைவாசம் அனுபவிப்பதற்கும் இனிமேல் தயங்கப்போவதில்லை" என்று எதிர்க்கட்சித் தலைவியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 41ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டும், எஸ் டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்காவின் 33 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டும், நடத்தப்பட்ட மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியஅவர், மேலும் கூறுகையில் ஏற்றுமதித்துறை சம்பந்தப்பட்ட விடயங்களிலும் கூட அரசரங்கம் அவசரகால விதிகளை அறிமுகமாக்கி இருக்கின்றமை அராஜகத்தனமானது. அரசாங்கம் இத்தகைய அராஜகச் சட்டங்களை இயற்றும் போது என்ன மனநிலையைக் கொண்டிருக்கிறது என்பதை எம்மால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கும் இத்தகைய சட்டங்களை எதிர்க்க வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையாக உள்ளது. இதற்காக எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்றிணையவேண்டும்என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஜே. வி. பியினர் புத்துயிர் பெறுவதாக அரசாங்கம் தெரிவிக்கும் புகார்கள் எதிர்வரும் தேர்தல் காலங்களின் போதும் ஜே வி. பி. பயங்கரவாத தந்திரோபாய அணுகுமுறையை கடைப்பிடிக்கும் ஒரு எத்தனமாக இருக்கும் என்றும் சந்தேகம் வெளியிட்டார்.

ளையும் பெரியளவினதான உயிரிழப்பையும் தொடர்ந்து இராணுவத்திற்குள் ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றில் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பித்த வேளை அவசர அவசரமாகத் திரட்டப்பட்ட சிப்பாய்கள் போரின் கடுமையைத் தாக்கு பிடிக்க முடியாது மிகவும் மனச்சோர்வும், விரக்தியும்அடைந்துள்ளதாகவும், அதிகாரிகளின் கட்டளைகளுக்கு பணிந்து நடக்க மறுத்து வருவதாகவும செய்திகள் தெரிவிக்கின்றன.

தில் இருந்து ஓடுவோர்தொகை அதிகரிப்பதாகவும் தெரிய வருகின்றது இவ்வாறு தப்பி செல்பவர்கள் சிலர் ஆயுதங்களுடனேயே ஓடிவிடுவதாகவும், இதனால் சமூக விரோதச் செயல்கள் நாட்டில் அதிகரிப்பதாகவும் இராணுவத் தரப் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவ தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்ண சகல இராணுவ டங்களையும், நடைமுறைகளையும் கடுமையாக அமுல் செய்யவேண்டும் எனவும் இதனை மீறி செயற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# ராணுவத் தலைமைப்பீடம் மீது கனிஷ்டஅதிகாரிகள் அதிருப்தி

சிறிலங்கா இராணுவத்தின் தலைமைப்பீடத்தினருக்கும் கனிஷ்டநிலை இராணுவ அதிகாரிகளுக்குமிடையே பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக 'லக்தீப' பத்திரிகை ஆசிரியர் வினிஎட்டிகொட தெரிவித்தார்

அண்மையில் அம்பாறையில் பயிற்சி பெற்று வெளியேறிய இராணுவத்தினரின் அணிவகுப்பு மரியாதையின்போது போலி குண்டுகளுக்கு பதிலாக உண்மையான குண்டுகள் வெடித்தசம்பவம்குறித்தவிசாரணை

தப்பி ஓடிய இராணுவத்தினரை வலுக்கட்டாயமாக படையில் சேர்க்க முயற்சித்தல்,

மனித உரிமை மீறல்களுக்காக இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை

எம்பிலிப்பிட்டியவில் மாணவர் கொல்லப்பட்டமை தொடர்பாக எட்டு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகின்றமை,

வாழைச்சேனை காயாங்கேணியில் புலிகளால் மேற்கொள்ளபபட்ட தாக்குத

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காயாங்கேணி அதிரடி; உயர் மட்ட விசாரணை

[கொழும்பு]

மட்டக்களப்புகாயாங்கேணியில் கடந்த திங்களன்று இடம் பெற்ற புலிகளின் அதிரடித் தாக்குதல் சம்பவம் குறித்து இராணுவ உயர் மட்டத்திலான விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது இது குறித்து விசாரணை மேறகொள்ள பிரிகேடியா உபாலி கருணரத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அளவெட்டியில் வீடுகள் தகர்ப்பு: பெறுமதியான பொருள்கள் சூறை

## - ராணுவம் சற்று பின்வாங்கியது

(நமது நிருபர்)

அளவெட்டிப பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அளவெட்டி வடக்கில் பல வீடுகளைத் தரைமட்டமாக்கியுள்ளதுடன் பூட்டியிருந்த பல வீடுகளை உடைத்து பெறுமதியான சொத்துக்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அளவெட்டி வடக்கில் சீனன் கலட்டி அரசினர் பாடசாலை வரை நேற்று பொதுமக்கள் சென்று தமது வீடுகளைப் பார்வையிட்டதுடன் கைவிட்டுவந்த பொருள்களில் சிலவற்றையும் மீட்டுவந்தனர்.

கடந்த ஆவணி மாதம் 20-ம் திகதி சிறிலங்கா இராணுவம் இருமுனைகளில் அளவெட்டிப் பகுதியைச் சுற்றிவளைத்ததும் இதனால் பல பொதுமக்கள் தமது சொத்துக்களை கைவிட்டு அகதிகளாக வெளியேறியமையும் தெரிந்ததே

அளவெட்டி வடக்கில் தெற்கு நோக்கி ஒருமைல் தூரம் வரை முன்னேறியிருந்த இராணுவம் தற்போது பின்நோக்கிச் சென்று தெல்லிப்பளை, பண்டதரிப்பு பிரதான வீதிக்கு அண்மையில் தரித்து நிற்கிறது,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பு நோக்கி பலத்த எறிகணை வீச்சு

(நமது நிருபர்)

மாதகல், இளவாலை பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பண்டத்தரிப்பு நோக்கி நேற்று நண்பகல் எறிகணைத் தாக்குதல்களை மேற் கொண்டனர்.

நண்பகல் ஒருமணி முதல் மூன்றுமணி வரை ஐந்திற்கு மேற்பட்ட எறிகணைகளை இவர்கள் ஏவினர் இவை அனைத்தும் பண்டத்தரிப்பை அண்டிய பகுதிகளிலேயே வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்த போதிலும் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (ச)

## திருக்கோணமலை நகரில் 12 பொதுமக்கள் கைது

[திருக்கோணமலை]

திருக்கோணமலை பெரிய கடைப் பகுதியை கடந்த வியாழக்கிழமை சுற்றிவளைத்த பொலிசார் 12 பேரை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அப்பகுதியினை சுற்றிவளைத்த பொலிசார் அப்பகுதி மக்களை சின்னமுற்ற வெளியில் கூடுமாறு பணித்தனர் என்றும்,

இவ்வாறு அங்கு சென்றோர் பொலிசாரால் தனித்தனியாக சோதனையிடப்பட்டனர் என்றும்,

இதில் 12 பேரை மேல் விசாரணைக்காக பொலிசார் அழைத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**நாளை...**

நெடுங்கேணி பாடசாலை இந்திய ராணுவமினி முகாம் மீதான புலிகளின் தாக்குதல் பற்றி தனது நேரடி அனுபவத்தை விரிக்கிறார் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைபிரிவின் முன்னாள் தளபதி மேஜர் கிண்ணி.

## வேலை நிறுத்தம் செய்தால் மரண தண்டனை

### தோட்டப் பகுதிகளில் சுவரொட்டி

(காலி)

தோட்ட மக்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அறிவித்ததை அடுத்து அன்றைய தினம் இரவு இனம் தெரியாத கோஷ்டியினர் தொழிலாளர்களின் லயன் அறைக்கதவுகளை உடைத்து நொருக்கியதுடன் பல இடங்களில் "வேலை நிறுத்தம் செய்பவர்களுக்கு மரணதண்டனை" என்ற சுவரொட்டிகளையும் ஒட்டி விட்டுச் சென்றுள்ளனர்

எனினும் தொழிலாளர் இம்மிரட்டல்களையும் பொருட்படுத்தாமல் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர் இச்சம்பம் காலி உடுகமை பகுதியைச் சேர்ந்த ஹோமகொன தோட்டத்திலேயே இடம்பெற்றது

தோட்டத்தில் நடைபெறும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**பனையை தறிக்காதீர் பயனை குறைக்காதீர்**

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**OLIVETTI TYPE WRITER**
நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (3208)

### உடன் விற்பனைக்கு உண்டு

வெள்ளை சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/- உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு:- இல. 01. மத்திய சந்தை மானிப்பாய். (3272)

### Your Watches, Clocks& Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.
(Opposite old Vihare)
(சி 5044)

## தச்சனா அகதிமுகாமில் மன்னார்த்தீவு மக்கள்

(வவுனியா)

புதிதாகத் திறக்கப்பட்டுள்ள தச்சனா மருதமடு அகதி முகாமிற்கு மன்னார்த் தீவிலிருக்கும் அகதி மக்கள் வந்து தங்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த முகாமில் 80 குடிசைகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் ஒவ்வொரு குடிசையிலும் பத்துக் குடும்பங்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## கொடித்தினம்

(வேலணை)

சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடித்தினம் அடுத்த மாதம் (ஒக்டோபர்) முதலாம் திகதியில் இருந்து ஒரு வாரத்திற்கு (01- 10- 92- 07- 10- 92) நாடெங்கிலும் கொண்டாடப்படவுள்ளது. (14)

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதி பெற்ற ஐந்து மாணவர்களுக்கு நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தில் தேநீர் விருந்தும் பாராட்டுவிழாவும் நடத்தப்பட்டுள்ளது நிலையத் தலைவர் கணேசன் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் நல்லூர் கொத்

# அக்காச்சி எழுச்சிக் கிராமம் ஓராண்டு நிறைவில்

பாரிய தொட்டிக்குள் பத்திற்கு மேற்பட்ட பெண்களும் ஆண்களும் சூழ்ந்து நின்று குனிந்து குடங்களைஅமிழ்த்தி அவற்றில் நீரை நிரப்பி சிலர் தலைகளிலும் ஏனையோர் இடுப்பிலும் வைத்துக் கொண்டு ஓர் இனம்புரியாத அகமகிழ்வுடன் பலதிசைகளையும் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

இந்த கொழுத்தும் வெயிலில் இவர்கள் முகங்களில் புன்னகை தவழ நீரை அள்ளிச் செல்கிறார்களே என எனக்குள் எண்ணிக்கொண்டு மெய் மறந்து நிற்க, திடீரென கம்பீரமான ஒருகுரல் நீங்கள் அப்படிப்பார்ப்பதில் நியாயமிருக்கிறது. இவர்களது புளகாங்கிதத்திற்கு பல அர்த்தங்கள் உள்ளன. பலதலைமுறைகள் வாழ்ந்த இந்த மண்ணில் இன்று தான் நாங்கள் நீரை இவ்வளவு சுலபமாகப் பெற்றுக் கொள்கிறோம் என்றார் அக்காச்சிக் குடியிருப்பில் எங்களைச் சந்தித்த வயோதிபர் ஒருவர். சோடைப் பனைகளும் செழித்தோங்காத தென்னைகளையும் கொண்டிருந்த உவரேரியில் மிதக்கும் கலட்டித் திடல் நடுவே ஒரு வருடத்தின் முன் உருவாக்கப்பட்டதுதான் இந்த அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு.

கல்வீடுகள், பாடசாலை, நூல்நிலையம், விளையாட்டு மைதானம் ஆகியவற்றைக் கொண்டு அந்த வெட்டை வெளியில் ஓர் எழுச்சிக் கிராமம். வலதுபுறமாக இறங்கிப் பார்த்தால் ''அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு'' என்ற வாசகத்துடன் கப்டன் அக்காச்சியின் உருவப்படத்தைத் தாங்கிய ஒரு சீமெந்துக்கட்டு காணப்பட்டது.

ஆட்டோவால் இறங்குவதற்குள் அக்குடியிருப்பு மக்களில் சிலர் எம்மை சூழ்ந்து கொண்டார்கள். எதிரில் பட்ட நடுத்தர வயதுடைய அவரிடம் வெயிலிற்கு ஒதுங்கவே ஒரு மரமில்லாத இந்த இடத்தில் எப்படி வாழ்கிறீர்கள் என ஆச்சரியத்துடன் கேட்டேன். எப்படி வாழ்ந்தோம் எனத் தெரிந்து கொண்டீர்களானால் நாம் சொர்க்க பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொள்வீர்கள் என மிகவும் மகிழ்வுடன்கூறிய அவர் எம்மை அன்புடன் வரவேற்று ஊரகப் பணிமனை என்ற ஒரு கட்டடத்திற்குள் அழைத்துச் சென்றார்.

இங்கே தமிழீழ மண் மீட்புக்காகத் தம்முயிரை ஈந்த ஆயிரக்கணக்கான மாவீரர்கள் வரிசையில் ஒரு சிலரது உருவப்படங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்ட சில நிமிடங்களுக்குள் எமக்கு தேநீர் பரிமாறப்பட்டது அதனை அருந்திக் கொண்டிருந்த

துன்பங்களைச் சுமந்தபடி வாழ்ந்து வந்த எங்களுக்கு விடுதலைப்புலிகள் இதை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் அறிவு தெரிந்த காலத்திலிருந்து எத்தனையோ மாரிகளைச் சந்தித்து விட்டோம் ஆனால் கடந்த மாரியில் தான் நாம் நிம்மதியாக வீடுகளுக்குள் உறங்கினோம் எனக் கூறிப் பெருமூச்சு விட்டார் அந்தப் பெரியவர் இவரது பெருமூச்சிற்கு பின்னால் பல சொல்லொணாத் துயரங்கள் மறைந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொண்டு ஊரகப் பணிமனைப் பொறுப்பாளரை நோக்கினேன்.

இந்திய இராணுவ அட்டூழியங்களின் போது இந்தக் கலட்டித்திடலில் ஆங்காங்கே உருவிழந்து கிடந்த கொட்டில்கள் விடுதலைப் புலிகளுக்கு புகலிடங்களாயின ஏற்கனவே முறையான ஊதியமின்மையால் அரைப் பட்டினியோடு வாழ்ந்த இம் மக்கள் அந்த ஏழ்மையிலும் தமக்குண்ணக் கிடைத்ததை மாலையில் புலிகளுடன் பகிர்ந்து கொண்டனர் சமுதாயம் இவர்களை வஞ்சித்திருப்பினும் அந்த மக்களின் நெஞ்சில் வாஞ்சை கருகிவிடவில்லை இரவில் கண்விழித்து புலிகளைக் காத்தார்கள்.

விடுதலைப்புலிகள் இந்த மக்களுக்கு கைகொடுத்து தூக்கிவிட முடிவு செய்ததின் விளைவாக தென்னந் தோப்பினிடையே கல்லாலமைத்த வீடுகள் கம்பீரமாக நிமிர்ந்தன. உழைத்த பின் வந்து ஓய்வாக உறங்கும் ஒரு உறையுள் கடந்தவருடம் தியாகி திலீபன் உயிர் நீர்த்த இதே தினத்தில் இவர்களுக்குக் கிடைத்தது பொய்க்காத நம்பிக்கைகளுடன் வாழ்ந்த இவர்களின் வாழ்வில் ஒளிபடரத் தொடங்கியது.

தொடர் பாறைகளால் ஓர் கலட்டித்திடலாக அன்று காட்சியளித்த வெட்டை வெளியை விடுதலைப்புலிகள் பாடுபட்டு பண்படுத்தி ஓர் எழுச்சிக்கிராமமாக மாற்றியமைத்தார்கள். நூறு பரப்பினை தேர்ந்தெடுத்து அதில் மிக அகண்ட வீதியை அமைத்து அதன் இருபுறமும் கற்களால் அமைக்கப்பட்ட இந்த 27 வீடுகளையும் கட்டி எம்மைக் குடியிருக்க வைத்தது டன் எமது பிள்ளைகள் கல்வி கற்க பாடசாலைக்குச் செல்ல முன்னர் படங்களைக் கூடப் பார்க்கும் அனுபவங்கூட கிடை

இவற்றையெல்லாம் கேட்டவுடன் இக்குடியிருப்பைச் சுற்றிப்பார்வையிட வேண்டும் என்ற ஆவல் தூண்டவே எழுந்து அகண்ட வீதியூடாக நடந்து சென்றோம் வழியில் தீப்பெட்டி இரண்டு ரூபா, மண்ணெண்ணெய் இருபது ரூபா என ஒரு பட்டியல் தொங்கியது திகைப்பின் மத்தியில் அதற்குள் நுழைந்தபோது ''உதவும் கரங்கள்'' என பெயர்ப்பலகை தொங்கியது. அங்கே அக்கிராம மக்களுக்கு மிகவும் மலிவான விலையில் பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றன என்பதை தெரிந்து கொண்டேன்.

அருகில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் காணப்பட்டது அங்கே ஊட்டச்சத்து தொற்று நோய் தடுப்புகளுக்கு தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் இது இயங்குவதாக அறிந்தேன், இம் மருந்தகத்தில் முதலுதவி கற்றுள்ள இளம் யுவதிகள் பணியாற்றுவதாகவிளக்கமளிக்கப்பட்டது

இவ் வீடுகளின் முடிவில் ஒரு புற்பாய் தொழிற்சாலை

**சசிகரன்**

காணப்பட்டது இக் குடியிருப்பிற்கு கிடைக்கும் ஒரே ஒரு மூலப்பொருள் சம்புப்புல் தான், மாரிகாலத்தில் முளைக்கும் இதனை இக் குடியிருப்பில் வாழ்வோர் வெட்டி வந்து பதப்படுத்திச் சேகரித்து தறியில் பாய்களாக உருவாக்கிறார்கள் நெசவு செய்த இந்தப் பாய்கள் இங்குள்ள இளம் பெண்களுக்கு கணிசமான தொழில் வருமானமாக மாறியுள்ளது தறியின் உள்ளே நுழைந்து பார்த்தால் ஒரு புறம் சம்புப் புல் கட்டுக்கட்டாகக் குவிக்கப்பட்டுள்ளது மறு புறத்தில் அழகிய புற்பாய்கள் பெருமளவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன

சந்தை வாய்ப்புக்கள் இல்லாமையால் இவை முடங்கிக் கிடக்கின்றன என்றனர் சுமார் இரண்டாயிரம் வரையான புற்பாய்கள் பலவித அளவுகளிலும் காணப்பட்டன பந்திப் பாய்கள் கூட காணப்பட்டன இதற்குப் பொறுப்பானவர் விளக்கமளிக்கையில் 12 பெண் பிள்ளைகள் வேலை

தறிகளில் நாளாந்தம் 75 பாய்கள் பின்னப்படுகின்றன இவை சந்தைப்படுத்த முடியாமையினால் இத் தொழிற்சாலையை விரிவுபடுத்தவோ தொடர்ந்து நடத்தவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கவலையுடன்கூறினார்.

திரும்பி வரும் வழியில் கிணறு வெட்டப்பட்டு தூர்ந்துபோய்க் கிடந்தது இது ஏன் வெட்டப்படவில்லைஎன வினவியபோது பொக்கணை என்ற பெயரே ஒழுங்கில்லாது மண் அடியில் அகழப்பட்டுக் கல்லறைக்குளிருந்து சுரக்கின்ற ஊற்றைக் குறிக்கின்றது. இது ஒரேதொடர் பாறைகள்உள்ள இடம், இங்கு கிணறுவெட்ட முடியாது. அதனால் இது கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இந்த கஷ்ரப்பட்டு கிணறு தோண்டினாலும் உவர்நீர் தான் கிடைக்கும் நன்னீருக்கு இரண்டு மைல் தூரம் போக வேண்டும் நள்ளிரவு 12.00 மணிக்கு போனால் முதல் நான்கு குடங்களுக்கு மட்டுமே நீர் கிடைக்கும், ஏனையோர் நின்று நீர் ஊற ஊற அள்ளி வரவேண்டும்என விளக்கப்பட்டது இதை நிவர்த்தி செய்ய தற்போது புத்தூரிலிருந்து குடியிருப்புவரை நான்கு மைல் குழாய் மூலம் நீர் கொண்டுவரப்படுகிறது. வாதரவத்தை மக்களுக்கு தற்போது குழாய்மூலம் நீர் கிடைக்கிறது ஓராண்டு நிறைவான இன்றுமுதல் பவுசர் மூலம் நீர் வழங்கப்படுகிறது. பல தலைமுறைகளாக வாழ்ந்த இவர்களுக்கு இன்றுதான் குடிநீர் கிடைக்கிறது என பொறுப்பாளர் கூறினார். மேலும் இந்த மண்ணில் மாரிகாலத்தில் மட்டுமே விவசாயம் நடைபெறுகிறது. வற்றாளை, மிளகாய், வெங்காயம் போன்றவை பயிரிடப்படும். ஏனையவை உற்பத்தியாவதில்லை பல வழிகளில் முயற்சித்தும் இதுவரை தோல்வியே கிடைத்தது. செயற்கையாகதுளம் அமைக்க எடுத்த முயற்சியும் கற்பாறைகளால் தோல்விகண்டது. இதுவரை காலமும் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்துவந்த இக் குடியிருப்பு மக்களின் எதிர்காலம் இவர்களது அயராத உழைப்பினாலும் தன் நம்பிக்கையினாலும் பிரகாசமாய் அமையும் என்ற திருப்தியுடன் விடை பெற்றோம்.

## திலீபன் நினைவு நிகழ்வுகளில் பி. பி. ஸி. செய்தியாளர்

தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் நிகழ்ச்சிகளை தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் பி. பி. ஸியின் செய்தியாளர் படம் பிடித்துக்கொண்டதுடன்' இந்நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளையும் மிகவும் ஆர்வத்துடன் சேகரித்துள்ளார். (க)

## ஆயுர்வேத வைத்தியருக்கு ஒய்வூதியத்திட்டம்

(கொழும்பு)

ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமொன்றை சுதேச மருத்துவ அமைச்சு உருவாக்கவுள்ளது. அமைச்சர் ஜே எம். லொக்குபண்டாவின் மேற்பார்வையில் இவ் ஓய்வூதியத் திட்டம் தயாரிக்கப்படுதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேதக் கல்லூரிகளில் பயின்றவர்களும் ஆயுர்வேதச்சபையில் தத்தமது பெயரைப் பதிவு செய்தவர்களுக்கும் 55 வயதைத் தாண்டியதுடன் ரூபா 2000 ஓய்வூதியத்தை இத்திட்டத்தின் கீழ் பெறுவர்.

## 41-ம் நாள் நினைவஞ்சலி
## (29 - 09 - 92)



**ஞானப்பிரகாசம் கீதபொன்கலன்**
[தாவீதுப்பிள்ளை]
போயிட்டி, இளவாலை

ஜனனம் : 25 - 09 - 1940
அகால மரணம் : 20 - 08 - 1992

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்துடன் எமமை வழிநடத்திச் சென்ற இனியவரே!
உம்மைப் பிரிந்த துயரால் துடிக்கின்றோம்!
கதறுகின்றோம்! கருணை உள்ள கடவுளிடம்
கையேந்தி உம் விண்வாழ்வு சிறப்புற
வேண்டுகின்றோம்!

உம் பிரிவால் வாடும்:

பிரியமுள்ள மனைவி நவமணி, பாசமிகு அப்பா, அம்மா, அன்புப் பிள்ளைகள் வசீகரன் (ஜேர்மனி), சகிலா, தாரணி, தயாகரன் (கனடா), உடன் பிறப்புக்கள் இராசகிளி, இராசசிங்கம், மரியதாஸ் (கனடா) அன்னக்கிளி (ஜேர்மனி), மைத்துனர்மார் செ. திருச்செல்வம், அ. திருச்செல்வம்(ஜேர்மனி) அலீஸ்ரன் (ஜேர்மனி), சவரிமுத்து, அலெக்சான்டர் ஜீவம் மைத்துனிமார் அன்னபாக்கியம் காலம்சென்ற நேசரத்தினம், தவமணி, லூர்துமலர், புனிதம். றஞ்சினி, மற்றும் மருமக்கள், பெறாமக்கள், உற்றார், உறவினர்

## கொடித்தினம்

(வேலணை)

சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடித்தினம் அடுத்த மாதம் (ஒக்டோபர்) முதலாம் திகதியில் இருந்து ஒரு வாரத்திற்கு (01-10-92-07-10-92) நாடெங்கிலும் கொண்டாடப்படவுள்ளது.

(14)

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதி பெற்ற ஐந்து மாணவர்களுக்கு நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தில் தேநீர் விருந்தும் பாராட்டுவிழாவும்நடத்தப்பட்டுள்ளது நிலையத் தலைவர் கணேசன் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் நல்லூர் கொத்தணி அதிபர் மு இராமலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் செல்வன் பாஸ்கரன் பரமகுருநாதன் மற்றும் செல்விகள் பவாநிதி ஆசைப்பிள்ளை, ஹேமதாரணிபழனிச்சாமி, அஜிதா சரவணமுத்து, றஜனி ஞானரட்ணம் ஆகியோரே பாராட்டப்பட்டவர்களாவர்.

மரமில்லாத இந்த இடத்தில் எப்படி வாழ்கிறீர்கள் என ஆச்சரியத்துடன் கேட்டேன். எப்படி வாழ்ந்தோம் எனத் தெரிந்து கொண்டீர்களானால் நாம் சொர்க்க பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொள்வீர்கள் என மிகவும் மகிழ்வுடன்கூறிய அவர் எம்மை அன்புடன் வரவேற்று ஊரகப் பணிமனை என்ற ஒரு கட்டடத்திற்குள் அழைத்துச் சென்றார்.

இங்கே தமிழீழ மண் மீட்புக்காகத் தம்முயிரை ஈந்த ஆயிரக்கணக்கான மாவீரர்கள் வரிசையில் ஒரு சிலரது உருவப்படங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்ட சில நிமிடங்களுக்குள் எமக்கு தேநீர் பரிமாறப்பட்டது அதனை அருந்திக் கொண்டிருந்த போதே பெரியவர் அங்கு இருந்த ஓர் இளைஞரைக்காட்டி இவர் தான் முழுநேரத் தொண்டராக இருந்து எங்கள் வாழ்விற்கு வித்திடுகிறார். இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் 41 குடும்பங்களுக்குள்ளும் எழும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு இவரே தீர்வு காண்கிறார். பல வருடங்களாக

கடந்தவருடம் தியாகி திலீபன் உயிர் நீர்த்த இதே தினத்தில் இவர்களுக்குக் கிடைத்தது பொய்க்காத நம்பிக்கைகளுடன் வாழ்ந்த இவர்களின் வாழ்வில் ஒளிபடரத் தொடங்கியது.

தொடர் பாறைகளால் ஓர் கலட்டித்திடலாக அன்று காட்சியளித்த வெட்டை வெளியை விடுதலைப்புலிகள் பாடுபட்டு பண்படுத்தி ஓர்எழுச்சிக்கிராமமாக மாற்றியமைத்தார்கள். நூறு பரப்பினை தேர்ந்தெடுத்து அதில் மிக அகண்ட வீதியை அமைத்து அதன் இருபுறமும்கற்களால்அமைக்கப்பட்ட இந்த 27 வீடுகளையும் கட்டி எம்மைக் குடியிருக்க வைத்தது டன் எமது பிள்ளைகள் கல்வி கற்க பாடசாலைக்குச் செல்ல முன்னர் படங்களைக் கூடப் பார்க்கும் அனுபவங்கூடகிடைத்ததில்லை. ஆனால் இன்று இங்கு இவர்களால் அமைத்து தரப்பட்டுள்ள பாலர் பாடசாலையில் கற்ற பாடல்களை கூட்டாகச் சேர்ந்து பாடிக்களிக்கிறார்கள். விளையாட்டுத் திடலில் ஊஞ்சல், சறுக்கல்களில் மனம்லயித்து ஆடுகிறார்கள் என அருகில் நின்ற ஒருவர் பெருமிதத்துடன் கூறினார்.

வந்து பதப்படுத்திச் சேகரித்து தறியில் பாய்களாக உருவாக்கிறார்கள் நெசவு செய்த இந்தப் பாய்கள் இங்குள்ள இளம் பெண்களுக்கு கணிசமான தொழில் வருமானமாக மாறியுள்ளது தறியின் உள்ளே நுழைந்து பார்த்தால் ஒரு புறம் சம்புப் புல் கட்டுக்கட்டாகக் குவிக்கப்பட்டுள்ளது மறு புறத்தில் அழகிய புற்பாய்கள் பெருமளவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன

சந்தை வாய்ப்புக்கள் இல்லாமையால் இவை முடங்கிக் கிடக்கின்றன என்றனர் சுமார் இரண்டாயிரம் வரையான புற்பாய்கள் பலவித அளவுகளிலும் காணப்பட்டன பந்திப் பாய்கள் கூட காணப்பட்டன இதற்குப் பொறுப்பானவர் விளக்கமளிக்கையில் 12 பெண் பிள்ளைகள் வேலை செய்கிறார்கள், இங்குள்ள 7 குடிநீர் கிடைக்கிறது என பொறுப்பாளர் கூறினார். மேலும் இந்த மண்ணில் மாரிகாலத்தில் மட்டுமே விவசாயம் நடைபெறுகிறது. வற்றாளை, மிளகாய், வெங்காயம் போன்றவை பயிரிடப்படும். ஏனையவை உற்பத்தியாவதில்லை பல வழிகளில் முயற்சித்தும் இதுவரை தோல்வியே கிடைத்தது. செயற்கையாகதளம் அமைக்க எடுத்த முயற்சியும் கற்பாறைகளால் தோல்விகண்டது இதுவரை காலமும் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்துவந்த இக் குடியிருப்பு மக்களின் எதிர்காலம் இவர்களது அயராத உழைப்பினாலும் தன் நம்பிக்கையினாலும் பிரகாசமாய் அமையும் என்ற திருப்தியுடன் விடை பெற்றோம்.

## பாகிஸ்தானிய டாக்டர்கள் இலங்கை வருவர்

(கொழும்பு)

பாகிஸ்தான் அரசாங்கம் ஐந்து டாக்டர்களையும் ஐந்து அன்ஸ் தெடிஸ்டுகளையும் இலங்கையில் ஓராண்டு பணியாற்ற அனுப்பவுள்ளது. பாகிஸ்தான் அரசு உதவி செய்யும் அடிப்படையில் இவர்களை அனுப்புகிறது எனத் தெரிவிக்கபபடுகிறது.

இந்த நல்லுறவு ஏற்பாடு பற்றி பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

---

ஜனனம் : 25 - 09 - 1940

அகால மரணம் : 20 - 0? - 1992

அன்பின் உருவமாய் பண்பின் சிரமாய்
பாசத்துடன் எமமை வழிநடத்திச் சென்ற இனியவரே!
உம்மைப் பிரிந்த துயரால் துடிக்கின்றோம்!
கதறுகின்றோம்! கருணை உள்ள கடவுளிடம்
கையேந்தி உம் விண்வாழ்வு சிறப்புற
வேண்டுகின்றோம்!

உம் பிரிவால் வாடும்:

பிரியமுள்ள மனைவி நவமணி, பாசமிகு அப்பா, அம்மா, அன்புப் பிள்ளைகள் வசீகரன் (ஜேர்மனி), சகிலா, தாரணி, தயாகரன் (கனடா), உடன் பிறப்புக்கள் இராசகிளி, இராசசிங்கம், மரியதாஸ் (கனடா) அன்னக்கிளி (ஜேர்மனி), மைத்துனர்மார் செ.திருச்செல்வம், அ.திருச்செல்வம்(ஜேர்மனி) அலீஸ்ரன் (ஜேர்மனி), சவரிமுத்து, அலெக்சான்டர் ஜீவம் மைத்துனிமார் அன்னபாக்கியம் காலம்சென்ற நேசரத்தினம், தவமணி, லூர்துமலர், புனிதம். றஞ்சினி, மற்றும் மருமக்கள், பெறாமக்கள், உற்றார், உறவினர்

அன்னாரின் ஆன்ம
இளைப்பாற்றிற்காக 29-09-92
செவ்வாய்க்கிழமை புனித அடைக்கலநாயகிஆலயத்தில்
காலை 10.00மணியளவில் திருப்பலிஒப்புக்கொடுக்கப்படும்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல் : இராசசிங்கம்

(3281)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



செல்வி
இராஜரட்ணம்
**கவிதா**



செல்வன்
பத்திநாதன்
**கவாஸ்கர்**

14-07-76-அன்னை மடியில்-13-07-?8
அந்நியர் அழிப்பில்: 14-08-92

நாட்கள் நாற்பத்தி ஐந்து நகர்ந்தன ஆயினும்
உங்கள் பாசத்தின் வேட்கை தணியாது வேகிறது எம் உள்ளம்

மண்ணினில் எமக்கு பாசங்கள் பல காட்டி
விண்ணினை நோக்கி விரைந்த எம் செல்வங்களின்
மரணச் சடங்கிற்கு நேரில் வந்தோருக்கும்,
தூரத்தே இருந்து துக்கம் விசாரித்தோருக்கும்,
பக்கத்தில் இருந்து பல உதவி புரிந்தோருக்கும்
இக்கவி சொல்லும் நன்றிகள் உரித்தாகுக.

- குடும்பத்தினர்

185/9 கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

(சி-5124)

---

## பயணிகள்

### தடுத்துவைப்பு

வவுனியா பிறவுண் அன் கொம்பனி கட்டடப் பகுதியில் பயணிகள் தினமும் பல மணிநேரம் இராணுவ உளவாளிகளினால் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

புலனாய்வுச் சோதனை நிலையப் பகுதியான இதில் உள்ள உளவாளிகள் நகரத்தை நோக்கிச் செல்லும் பயணிகளை காலையிலிருந்து பகல் 12.00 மணிவரை தடுத்து வைத்து விசாரணை நடத்திய பின்னரே போக்குவரத்து மேற்கொள்ள அனுமதிக்கின்றனர். இப் பகுதியில் வைத்தே பயணிகளுக்கு நகரத்திற்கு உள்ளே செல்வதற்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

(தி)

## 12ஆவது ஆண்டு நிறைவு விழா


(கொழும்புத்துறை)

பாஷையூர் புனித அந்தோனியார் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 12ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 3-00 மணிக்கு பாஷையூர் சிறுவர் பூங்காவில் சங்கத் தலைவி திருமதி கெலன் பிலிப் தலைமையில் நடைபெறும்.

(24)

---

## 1-ம் ஆண்டு திவசம்



அன்னைமடியில்
1936 11-3?
மறைவு
1991-10-1?
திதி:
1992- 09- 28

இராமலிங்கம காசிலிங்கம் [ஆசிரியர்]

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எம் தெய்வமே! பேச்சொன்றும் பேசாமல் எங்கள் முகம் பாராமல் மூளை தடுமாறுதப்பா. துயரெது வந்தாலும் துடைப்பதற்கு அருள் உண்டென்று அயர்வகற்றி வந்தோம். எம் அகக்கோட்டை வீழ்ந்ததப்பா ஓராண்டு சென்றாலும் உம் இனிய உருவம் நீங்காமல் ஏங்கி ஏங்கிக் கதறுகிறோம். என்றென்றும் வாடுகிறோம் இனி என்றாவது தீருமா? இத்துயரம் ஒரு நாளும் தீராது ஏங்கி தவிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர் பிள்ளைகள்

பாற்பண்ணைவீதி,
திருநெல்வேலி.

(3285)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 28

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி-வட்டக்கச்சிப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்ட - சிட்டு (மயில்வாகனம் கிருஸ்ணதாஸ் - திருவையாறு, கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - தீவகம், மண்கும்பான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -
ரமேஸ் (இரத்தினம் சத்தியராஜ் - வானம்பாடி, காரைநகர், யாழ்)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 2 - இளைஞர்கள் உட்பட வந்தாறுமூலை, செங்கலடி - ?, மயிலம்பாவெளி ஐயங்கேணிப பகுதிகளைச் சேர்ந்த 8 தமிழர்கள் - எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன் - வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லிம் காடையர் கும்பலொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞன்.

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ்- கல்முனை) தொழிலுக்குச் சென்ற சமயம் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சடலமாகக் கரை ஒதுங்கிய கடற்றொழிலாளி மற்றும், இவருடன் சென்று காணாமற்போன சிறுவன் ஆகிய 2 - தமிழர்கள் - தீவகப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வேலணை, மண்கும்பான் மேற்கை சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5122)

### சிந்தனைக்கு

காலத்தை ஒத்திப் போடாதே;
தாமதத்தின் முடிவுகள் ஆபத்தானவை.
— வில்லியம் ஷேக்ஸ்பியர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## காலாவதியாகிப் போன காலவரையறைகள்

“போர் இன்னமும் இரண்டுமாத காலத்தில் முடிவடைந்துவிடும் என்று பிரதமர் டி. பி. விஜயதுங்க கடந்த யூன்மாதம் முதலாம் திகதி கூறியிருந்தார். இரண்டுமாத காலத்திற்கும் கூடுதலான காலம் இப்பொழுது கடந்துவிட்டது’’ இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான அனுரா பண்டாரநாயக்க பிரதமர் டி.பி.விஜயதுங்காவைப் பார்த்துக் கேள்விஎழுப்பியதோடு, அதைத்தொடர்ந்துஅமைச்சர் பதவி விலக வேண்டும் என்ற ரீதியிலும் பேசினார்

அனுரா பண்டார நாயக்க உண்மையிலேயே அமைச்சர் டி.பி.விஜயதுங்காவின் பேச்சில் நம்பிக்கை வைத்து இதைப் பேசியிருந்தாரானால் அவரது அறியாமையைக் குறித்து அனுதாபப்படுவதைவிட எமக்கு வேறுவழியில்லை. அதேவேளை, அமைச்சர் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அது முடியாதது குறித்துக் கேள்வி எழுப்பி அமைச்சருக்குத் தொல்லை கொடுக்க முயற்சித்தாரானால் அது நியாயமானது.

ஆனால், அனுரா பண்டார நாயக்க ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் தீர்ப்பதற்கு வரையறுக்கப்பட்ட முதலாவது கால எல்லை அல்ல இது. 1979 இல் ஜே ஆர். ஜெயவர்த்தனாவால் யாழ். குடாவிற்கு அனுப்பப்பட்ட பிரிகேடியர் திசவீரதுங்க தொடக்கம் கடந்த மாதம் அராலியில் கண்ணிவெடியில் சிக்கிமரணமான லெப் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்ணா வரை இனப்பிரச்சினை தீர்விற்கு கால எல்லை வகுத்திருந்தார்கள்தான் ஆனால், ஒருவரதுகால எல்லை எவையும் பிரச்சினையைத் தீர்க்கவில்லை இதே போன்றே அமைச்சர் டி. பி விஜயதுங்காவும் விதித்தகால எல்லைக்குள்ளும் எதுவித முடிவும் எட்ட முடியவில்லை.

சிறிலங்கா இராணுவ அமைப்பில் கட்டளை இடும், கட்டளைப்படுத்தும் அமைப்பில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துடன் பெரும்பாலான அதிகாரங்களை இராணுவத் தளபதி சிசில்வைத்தியரட்ணா பெற்றுக்கொண்டபோது மூன்றுமாத காலத்திற்குள் கிழக்கில் புலிகளை ஒழித்து, முழுமையான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தார். அப்பொழுது கூட்டுப்படைகளின் நடவடிக்கை தலைமையக தளகர்த்தாவான ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இது நடக்க முடியாத காரியம் என வெளிப்படையாகவே சவால்விட்டார். அதேபோன்றே இராணு

## சீனாவிடமிருந்து யுத்த விமானங்கள் பாக். கொள்வனவு; இந்தியா விசனம்

சீனாவிடமிருந்து எப் - 7 பீ யுத்த விமானங்களை பாகிஸ்தான் கொள்வனவு செய்யும் நடவடிக்கை இந்தியப் பாதுகாப்பத்துறை நிபுணர்கள் மத்தியில் மிகுந்த கவனத்தை ஈர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

பாகிஸ்தான் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு ஏற்ற நடவடிக்கை ஒன்றை இந்தியாவும் மேற்கொள்வது அவசியமென இந்திய பாதுகாப்புத்துறை நிபுணர்கள் இந்திய அரசைக் கோரியுள்ளனர்.

பாகிஸ்தான் தன்னுடைய இரண்டு விமானப்படைத் தொகுதிகளைப் பலப்படுத்துவதற்காக சீனாவின் எப்-7பி யுத்த விமானங்களைக்கொள்வனவு செய்வதற்காக சீனாவுடன் வியாபாரப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது தெரிந்ததே.

1983இல் இரு நாடுகளுக்கும் இடையே உருவான உடன்படிக்கையின் படி 1990 சீனாவிடம் இருந்து எப்-7 ரக யுத்த விமானங்கள் 75 ஐ பாகிஸ்தான் பெற்றுக்கொண்டது.

ஸ்ரொக் ஹோமிலுள்ள சர்வதேச அமைதி ஆராய்ச்சிக்கான நிறுவனத்தின் தகவலின்படி 1989இல் மேலும் 75‘எப்-7’ ரக யுத்த விமானங்களைப் பெறுவதற்கானகட்டளையை பாகிஸ்தான் சீனாவிற்கு அனுப்பியது பாகிஸ்தான் புதிதாக கொள்வனவு செய்யவுள்ள 327 யுத்த விமானங்களில் 200 சீனாவிடம் இருந்து பெறப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

‘எப்-7’ ரக விமானங்களை சீனாவிடம் வாங்குவதற்கு பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள முயற்சி தனிமைப்படுத்தப்பட்ட ஒரு முயற்சியாகக் காணப்படவில்லை. அது பாகிஸ்தானிய விமானப் படையை நவீனமயப்படுத்துவதற்கான ஒருமுயற்சியாகவே காணப்படுகின்றது என இந்தியப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் உதவியுடன் ஒரு பிராந்திய வல்லரசாக உருவாகுவதற்கான பாகிஸ்தானுடைய விருப்பத்தின் அடையாளமாகவே இதனைக்கருத முடியும் எனவும் டில்லி பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதாகக் கூறி அதற்கான ஆயுத உதவிகளை அமெரிக்கா தடை செய்துள்ள போதிலும், வர்த்தக ரீதியிலான ஆயுத ஏற்றுமதி இப்போது வேகமாக அதிகரித்து வருவதாகவும் பாதுகாப்பு ஆய்வுத்துறையைச் சேர்ந்த எயர் கொமடோர் ஜசித்சிங் தெரிவித்தார்.

1989ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கான அமெரிக்காவின் ஆயுத ஏற்றுமதி 99.329 மில்லியன் டொலராக இருந்த போதிலும் 1990 இல் இது 22.781 மில்லியனாக வீழ்ச்சி அடைந்தது. எனினும் 1992இல் இது 800.148 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

## ஆளின்றி செல்லும் விமானங்கள் இஸ்ரேலிடம் இந்தியா வாங்கும்

(டில்லி)

ஆட்களின்றிச் செல்லக் கூடிய விமானங்களை இந்தியாவிற்கு வழங்குவதற்கு இஸ்ரேல் முன் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானம் பொருளாதார ரீதியாக மிகவும் சிக்கனமானது எனவும் எதிரியின் நாட்டுக்குள்ளிலிருந்து உடனுக்குடன் புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுத் தரக்கூடியதெனவும் இந்தியபாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரேலுடைய விமானப் படை உற்பத்தித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் குழு ஒன்று இதுபற்றிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக அண்மையில் இந்தியா வந்திருந்தது இந்திய ராணுவ விமானப்படை உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடததிய இந்தக் குழுவினர் ஆட்கள் இல்லாமல் செல்லக்கூடிய இந்த விமானத்தின் பயன்பாடுகள் குறித்து அவர்களுக்கு விளக்கியுள்ளனர்,

மூன்றாவது பரம்பரையைச் சேர்ந்த நவீன கருவிகள், எதிரியின் இலக்குகளைத் தேடிக் கண்டு பிடித்தல் தொலைநோக்கு போன்ற கடமைகளைச் செய்யக்கூடிய விதமாக அமைக்கப்பட்டுள்ளது எனவும்,

ஆட்களுடன் சென்றுயுத்தத்தில் ஈடுபடும் விமானங்களால் ஏற்படக்கூடிய செலவுகளை இப்புதிய ரக விமானத்தின் மூலம் பலவழிகளில் ஈடுசெய்ய முடியும் அதே வேளையில் யுத்த விமானங்களில் உள்ள விமானஓட்டிகளுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தையும் இதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆட்கள் இன்றிச் செல்லக்கூடிய இந்த விமானம்தொடர்பாகவும் அதனுடன் தொடர்பான அனைத்து தொழில்நுட்பங்கள், இயங்கும் முறை பற்றிய பயிற்சி ஆகியவற்றையும் வழங்க இஸ்ரேல் முன்வந்தால் அதனை ஏற்றுக்கொள்வது பற்றி ஆராய்வதற்கு இந்தியா தயாராக இருப்பதாக இஸ்ரேலிய அதிகாரிகளிடம் இந்தியா தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது,

பதினைந்து வருடங்களின் முன்னர் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்பட்ட இந்த விமானம் எதிரியின் பிராந்தியத்திற்குள் ஆழமாக ஊடுருவிச் சென்று பல்வேறு விதமான புலனாய்வுத் தகவல்களையும் அனுப்பக்கூடிய கருவிகளைக் கொண்டுள்ளது.

இரவு பகலாகத் தொடர்ச்சியாக உடனுக்குடன் இத் தகவல்களை அனுப்பிக்கொண்டேயிருக்கும். யுத்த களத்தில் உள்ள நிலைமைகள், பீரங்கிகளின் தாக்குதல்கள், இலக்குகளுக்கான நிலைமைகள் எலெக்ட்ரோனிக் யுத்த தந்திரோபாயம், பாதிப்புகள் பற்றிய மதிப்பீடு, ஆதரவுப் படைகளுக்கான உத்தரவுகள், வானொலி அஞ்சல் போன்ற தகவல்களை உடனுக்குடன் தலைமையகத்திற்கு இது அனுப்பிக் கொண்டேயிருக்கும்.

புலனாய்வுத் தகவல்களை பெற்றுக் கொள்வதுதான் இக

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

## தென் ஆபிரிக்கா அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை

## கைவிடப்பட்ட பொதியில் ஒரு லட்சம் ரூபா பணம்

(கொழும்பு)

குண்டுப்பார்சல் எனப் பயந்த ஒரு பார்சலினுள் ஒரு இலட்சம் ரூபா கிடக்கக் காணப்பட்டது கொள்ளுப்பிட்டிச்சந்தியில் ஓர் தேநீர்க் கடையின் மேசையின் கீழ் இப் பார்சல் கிடக்கக் காணப்பட்டது கடைக்காரர் பயப்பீதியின் காரணமாக பொலிஸிற்கு தகவல் கொடுத்துள்ளார்

கடைக்கு விரைந்த பொலிஸார் மிகக் கவனமாக பார்சலை கடற்கரைக்கு கொண்டு சென்று பிரித்துள்ளனர் ஆனால் அதில் குண்டுக்கு பதிலாக ஒரு லட்சம் ரூபா பணம் இருந்தது.

கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கும் ஒரு வெளிநாட்டவருக்கு சொந்தமான பணம் எனப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் உரியவரிடம்ஒப்படைக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டோர் சார்பாக

## 10 ஆட்கொணர்வு மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல்

(கொழும்பு)

காரணம் கூறப்படாதுகைது செய்யப்பட்டு நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாது தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் மகசீன் மற்றும் களுத்துறைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 10ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கல்முனை சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த வேலாயுதன் லோகநாதன் (வயது 21) புறக்கோட்டை லட்சுமி பவான் விடுதியில் பில்கிளார்க் ஆக வேலைசெய்தவர் 13-1-92 அன்று இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மகசீன் சிறையில் உள்ளார்.

அக்கரைப்பற்று வெலிங்டன் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் பாக்கியநாதன் (வயது 23) 2-5-91 இல் அதிரடிப்படையினரால் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த பெருமாள்பிள்ளை கோகுலநாதன் (வயது 29) 6-3-91 இல் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று கோளாவில் நாவற்காட்டைச் சேர்ந்த குடும்பஸ்தரான கணபதிப்பிள்ளை குருகுலசிங்கம் 15-12-90இல் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை திருமாகரன் (வயது 24) 31-03-91 இல் அதிரடிப் படையால் கைதாகி மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர்களின் சார்பாக இவர்களது உறவினர் இவ் ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

## ஜே.வி.பி. முக்கிய பிரமுகர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

தேசப்பிரேமி ஜனதா விமுக்தி பெரமுனைத் தலைவரான கதிரகொட பலத்தாரகளுவா என்பவரை தங்காலைபொலிஸ் நிலையத்திலுள்ள பாதுகாப்பு இணைப்புப் பிரிவினர் ஹுன்கமை என்ற இடத்தில்வைத்து கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது

ஜே வி.பி கிளர்ச்சிக் காலத்தின்போதுஇடம்பெற்ற ரன்ன ஆஸ்பத்திரி டாக்டர் கொலை உட்பட பலகொலைச்சம்பவங்களின் பின்னணியில் இவர்இருந்தாரென்றும் இவர் ஒரு பயங்கரப்பேர்வழி என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கரகொட காட்டிலுள்ள குழி ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள், கைக்குண்டுகள் பெருந்தொகையான துப்பாக்கிகள் ஆகியவற்றினையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

## கிழக்கில் பொஸ்னியா நிலை உருவாக்கக் கூடாது

(கொழும்பு)

கிழக்கில் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர் ஒரு

அவசர காலசட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணை மீது நடைபெற்ற

[illegible] வீரதுங்க தொடக்கம் கடந்த மாதம் அராலியில் கண்ணிவெடியில் சிக்கிமரணமான லெப் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்ணா வரை இனப்பிரச்சினை தீர்விற்கு கால எல்லை வகுத்திருந்தார்கள்தான் ஆனால், ஒருவரதுகால எல்லை எவையும் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. இதே போன்றே அமைச்சர் டி. பி விஜயதுங்காவும் விதித்தகால எல்லைக்குள்ளும் எதுவித முடிவும் எட்ட முடியவில்லை.

சிறிலங்கா இராணுவ அமைப்பில் கட்டளை இடும், கட்டளைப்படுத்தும் அமைப்பில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துடன் பெரும்பாலான அதிகாரங்களை இராணுவத்தளபதி சிசில்வைத்தியரட்ணா பெற்றுக்கொண்டபோது மூன்றுமாத காலத்திற்குள் கிழக்கில் புலிகளை ஒழித்து, முழுமையான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தார். அப்பொழுது கூட்டுப்படைகளின் நடவடிக்கை தலைமையக தளகர்த்தாவான ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இது நடக்க முடியாத காரியம் என வெளிப்படையாகவே சவால்விட்டார். அதேபோன்றே இராணுவத்தளபதியால் இதனைச் சாதிக்கமுடியவில்லை.

மாறாக, கிழக்கில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தொடர்ச்சியான அதிரடித் தாக்குதலினால் இராணுவம் தனது போர்யுக்திகளை மாற்றி அமைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது இதனால் ரோந்து நடவடிக்கைகளைக் குறைக்கவும், முகாம்களைப் பலப்படுத்தவும் வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன.

இதேபோல்வடக்கிலும்இராணுவத்தின்போர்யுக்திகள் புலிகளின் அதிரடித்தாக்குதல்களினால் கேள்விக்குள்ளாகியுள்ளன அண்மைக் காலத்தில் நீண்டதொடர் காவலரண்கள் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாவதும் பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினர் கொல்லப்படுவதும் வழமையான தொன்றாகி வருகிறது. வவுனியா எல்லை ஓரங்களில் உள்ளதும் வெற்றிலைக்கேணி - ஆனையிறவு பகுதியில் உள்ளதுமாகிய தொடர் காவலரண்கள் - இராணுவ வேலிகள் - மீது புலிகள் மேற்கொண்டதாக்குதல்கள் இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியதாயினும் பூநகரி-பள்ளிகுடா தொடர்காவரண்கள் அறுபத்தியிரண்டை ஒரே தாக்குதலில் விடுதலைப்புலிகள் தாக்கி அழித்தமை இவ் ‘இராணுவ வேலிகள்’ அமைக்கும் தந்திரோபாயம் பெரும் நெருக்கடி கட்டத்தை அடைந்துள்ளது.

அத்தோடு இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் எந்தப்பகுதிக்குள்ளும் தம்மால் ஊடுருவித் தாக்க முடியும் என்பதனையும் கடந்த இரு மாத காலத்திற்குள் புலிகள் தெளிவாக உணர்த்தியுள்ளனர் ஊர்காவற்றுறையில்-அராலிச்சந்தியில் புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலும், மண்டைதீவில்- சிறிலங்கா கடற்படையின் அதிவேக ரோந்துப்படகைக் கைப்பற்றியதன் மூலமும் புலிகள் இதனை நிரூபித்துக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் அனுராபண்டாரநாயக்க என்ன? பிரதமர் டி.பி.விஜதுங்கா என்ன? யாராக இருந்தாலும் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பது என்பதையோ அன்றி, அதற்கு காலவரையறை வகுப்பது பற்றியோ சிந்திப்பது என்பது சிறுபிள்ளைத்தனமானது ஆகும். மேலும் இராணுவத்தீர்வு காண்பதில் வெற்றி பெறமுடியவில்லை என்பதற்காக அமைச்சரை பதவி விலக கோருவதும் அர்த்தமற்றது. ஏனெனில் நடைமுறைச் சாத்தியமற்றதொன்றை செய்ய அமைச்சர் டி.பி.விஜயதுங்கா ‘அலாவுதீன் அற்புத விளக்கை”யா கையில் வைத்துள்ளார்?

---

களைப் பெற்றுத் தரக்கூடியதெனவும் இந்தியபாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரேலுடைய விமானப் படை உற்பத்தித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் குழு ஒன்று இதுபற்றிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக அண்மையில் இந்தியா வந்திருந்தது இந்திய ராணுவ விமானப்படை உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்திய இந்தக் குழுவினர் ஆட்கள் இல்லாமல் செல்லக்கூடிய இந்த விமானத்தின் பயன்பாடுகள் குறித்து அவர் ஏற்படக்கூடிய செலவுகளை இப்புதிய ரக விமானத்தின் மூலம் பலவழிகளில் ஈடுசெய்ய முடியும் அதே வேளையில் யுத்த விமானங்களில் உள்ள விமானஓட்டிகளுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தையும் இதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆட்கள் இன்றிச் செல்லக்கூடிய இந்த விமானம்தொடர்பாகவும் அதனுடன் தொடர்பான அனைத்து தொழில்நுட்பங்கள், இயங்கும் முறை பற்றிய பயிற்சி ஆகியவற்றையும் வழங்க இஸ்ரேல் முன்வந்தால் அதனை ஏற்றுக்கொண்டு வீச் சென்று பல்வேறு விதமான புலனாய்வுத் தகவல்களையும் அனுப்பக்கூடிய கருவிகளைக் கொண்டுள்ளது.

இரவு பகலாகத் தொடர்ச்சியாக உடனுக்குடன் இத் தகவல்களை அனுப்பிக்கொண்டேயிருக்கும். யுத்த களத்தில் உள்ள நிலைமைகள், பீரங்கிகளின் தாக்குதல்கள், இலக்குகளுக்கான நிலைமைகள் எலெக்ட்ரோனிக் யுத்த தந்திரோபாயம், பாதிப்புகள் பற்றிய மதிப்பீடு, ஆதரவுப் படைகளுக்கான உத்தரவுகள், வானொலி அஞ்சல் போன்ற தகவல்களை உடனுக்குடன் தலைமையகத்திற்கு இது அனுப்பிக் கொண்டேயிருக்கும்.

புலனாய்வுத் தகவல்களை பெற்றுக் கொள்வதுதான் இதனுடைய பிரதான—பொதுவான நோக்கமாக இருக்கும் இதனுடைய பெறுமானம் எவ்வளவு என்பது பற்றிய தகவல் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

## தென் ஆபிரிக்கா அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை

(ஜோகானஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, பொது இடங்களில் அபாயமான ஆயுதங்களைக் கொண்டு செல்வதை தவிர்ப்பது பற்றி ஓர் உடன்பாடு காணப்பட்டிருப்பதாக அதிபர் டீகிளார்க்கும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும், கூறியுள்ளனர்.

இரு தலைவர்களும் எட்டு மணி நேரம் நடத்திய பேச்சுக்களின் பின்னர் இதற்கான உடன்பாடு காணப்பட்டதாகவும், ஆளுக்கு ஒரு வாக்கு என்னும் அடிப்படையில் அரசியல் நிர்ணய சபை ஒன்று அமைக்கப்படுமெனவும், தேர்தல் நடத்தப்படும் வரை இச் சபை இடைக்கால அரசாக செயல்படுமென்றும் இணக்கம் காணப்பட்டிருப்பதாக இருவரும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

போய்பதாங் பகுதியில் நடந்த படுகொலைகளையடுத்து கடந்த ஜூன் மாதத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசுடனான பேச்சுக்களை முறித்துக் கொண்ட பின்னர் அதிபர் கிளார்க்கும், நெல்சன் மண்டேலாவும் சந்தித்துக் கொண்டது இது முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்மூழ்கி விற்பனை விவகாரம்

## அமெரிக்காவின் கோரிக்கை ரஷ்யாவால் நிராகரிப்பு

(மாஸ்கோ)

ஈரானுக்கு டீசலில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை விற்க வேண்டாமென அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை ரஷ்யா நிராகரித்து விட்டது.

மேற்காசியாவில் உறுதிப்பாடு மேலும் குலையாமல் இருப்பதற்காக ஈரானுக்கு இந்த நீர்மூழ்கிக் கப்பல்களை விற்றாக வேண்டி இருக்கின்றது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் ஆந்திரே கொரசிவேவ் கூறியுள்ளார்.

## செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி அமெரிக்க ராக்கட் சென்றது

(வாஷிங்டன்)

பதினேழு ஆண்டு கால இடைவெளிக்குப் பின் அமெரிக்கா செவ்வாய்க் கிரகத்துக்கு தனது ராக்கட் ஒன்றை வெற்றிகரமாக அனுப்பி வைத்துள்ளது.

ஆட்கள் எவருமில்லாத விண்வெளிக்கலத்தை ஏற்றி ரைட்டன் ராக்கட் ஒன்று கடந்த வெள்ளியிரவு விண்வெளியை நோக்கி அனுப்பப்பட்டது.

செவ்வாய்க் கோளில்காணப்படும் நில விபரங்கள் வானிலை தொடர்பான தகவல்களை இவ் ராக்கட் சேகரிக்கும் எனவும் மூன்றாண்டு கால இத் திட்டத்திற்கு எண்பத்தியொன்பது கோடி டொலருக்கும் அதிகமாக செலவாகும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழக சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் வரும்

தமிழக அரசியலில் அடுத்த சில மாதங்களில் பெரும் மாறுதல்கள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. தமிழக சட்டப் பேரவைக்கு ஆறு மாதத்தில் திடீர் தேர்தல் நடைபெறும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் அகில இந்தியத் துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

ஜெயலலிதாவுக்கு அவர் கட்சிக்குள்ளேயே பலத்தஎதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் ஒரு பிரிவு அவரை எதிர்க்கிறது. பத்திரிகைகளும் ஜெயலலிதாவை எதிர்க்கின்றன. பலதரப்பட்ட எதிர்ப்புகளைச் சமாளிக்கவும், மேலும் அதிக தொகுதிகளிலும் வெற்றி பெறவும் ஜெயலலிதா நினைக்கிறார். அதனால்தான் ஆளுநரைச் சமீபத்தில் சந்தித்து தமது ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்தார். பிரதமர் நரசிம்மராவ் இந்த விவகாரத்தில் தலையிட்டுக் கேட்டுக் கொண்டதன் பேரில், ஜெயலலிதா தமது ராஜினாமாவை வலியுறுத்தவில்லை இருந்த போதிலும் அவர் தனது பதவியை மிக விரைவில் ராஜினாமாச் செய்வார் என்றார் ஜனா கிருஷ்ணமூர்த்தி.

---

(கொழும்பு)

தேசப்பிரேமி ஜனதா விமுக்தி பெரமுனைத்தலைவரான கதிரகொட பலத்தாரகஉவா என்பவரை தங்காலைபொலிஸ் நிலையத்திலுள்ள பாதுகாப்பு இணைப்புப் பிரிவினர் ஹூன்கமை என்ற இடத்தில்வைத்து கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது

ஜே வி.பி கிளர்ச்சிக் காலத்தின்போது இடம்பெற்ற ரன்ன ஆஸ்பத்திரி டாக்டர் கொலை உட்பட பலகொலைச்சம்பவங்களின் பின்னணியில் இவர் இருந்தாரென்றும் இவர் ஒரு பயங்கரப்பேர்வழி என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கரகொட காட்டிலுள்ள குழி ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகள், கைக்குண்டுகள் பெருந்தொகையான துப்பாக்கிகள் ஆகியவற்றினையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

## கிழக்கில் பொஸ்னியா நிலை உருவாக்கக் கூடாது

(கொழும்பு)

கிழக்கில் முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர் ஒரு பொஸ்னியாவை உருவாக்க முனையக்கூடாது என்று சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசும் போது கேட்டுக் கொண்டார்.

அவசர காலசட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பாராளுமன்ற உறுப்பினரின் உரையில் குறுக்கிட்ட சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## இல. தமிழ் அகதிகள் அறுவர் விழுப்புரத்தில் கைது

(சென்னை)

விழுப்புரத்திற்கு சமீபமாக கீழப் புதுப்பேட்டை அகதிகள் முகாமருகே இருந்த ஆறு இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழகப் பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

தாம் பதிவு செய்து கொண்டிருந்த அகதிகள் முகாமிற்கு தகவல் தராமல் ஒளித்து கொண்டிருந்ததாக இவர்கள் மீது பொலிசார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் திண்டுக்கல், அண்ணா, மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களிலிருக்கும் அகதிகள் முகாமிலும் தமிழகப் பொலிசார் நேற்று முன்தினம் திடீர் சோதனை நடத்தியுள்ளனர். இந்தச் சோதனையின் போது முறைப்படி பதிவு செய்யாத பதினொரு பேர் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், சுமார் நூற்று நாற்பது அகதிகள் காணாமற் போயிருப்பதாகவும் மதுரையில் பொலிஸ் ஆணையாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## வழக்குச் செலவீடு சுதந்திரக் கட்சி திரட்டுகிறது

(கொழும்பு)

அண்மையில் உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடிசெய்யப்பட்ட ஜனாதிபதிதேர்தல்மனு வழக்கிற்கானசெலவு தொகையினை சேகரித்துத் திரட்டும் வகையில் கொடி விற்பனை திட்டமொன்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பித்துள்ளது:

இந்தகொடிவிற்பனை நேற்று முன்தினம் நுகேகொடையில் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் கூட்டுக் கூட்டத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## தலவாக்கலை தொழிலாளர் வேலை நிறுத்தம்

(தலவாக்கலை)

தலவாக்கலை ஹொலிரூட் மேல் டிவிஷன் தொழிலாளர்கள் கடந்த 24 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

வேலை தொடர்பாக தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையே இவ் வேலை நிறுத்தத்திற்குக் காரணமென இ. தொ. கா. தலவாக்கலை மாநில பிரதிநிதி தெரிவித்தார்.

இவ் வேலை நிறுத்தத்தில் சுமார் 300 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஈழநாதம்

## வேட்டுச் சத்தம் கேட்டதும் தந்தை வீழ்வதை கண்டேன்

-தியோபிலஸ் மரண விசாரணையில் மகள் சாட்சியம்

(கொழும்பு)

துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட சத்தம் கேட்டதும் எனது தந்தை நிலத்தில் விழுவதைக் கண்டேன். என்று கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவின் இரண்டாவது அதிகாரியான பொலிஸ் சுப்பிறின்டன் அந்தோனிப்பிள்ளை தியோபிலஸின் மரணம் பற்றி சாட்சியமளித்த காலஞ்சென்ற தியோபிலஸின் மகள் திருமதி. ஜெனட் ரஜினி ஜெபநாயகம் தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை பதில் நீதவான் ஜயந்தா டயஸ் நாணயக்கார நடத்திய விசாரணையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து சாட்சியளித்த அவர் கூறியதாவது;

நாங்கள் அசோஷியேட் டெட்மோட்டர் வேக்ஸ் நிறுவன அலுவலகத்துக்கருகில் நின்றுகொண்டிருந்தபோது பலமுறை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தத்தைக் கேட்டேன். பின்னர் எனது தந்தை மேற்படி நிறுவனத்தின் அலுவலக வாசலுக்கு எதிரில் நிலத்தில் விழுவதைக் கண்டேன் அவரது நெற்றியிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் எனது தந்தையின் கார்ச் சாரதி ஜகத்துடன் காரில் அவரின் அலுவலகத்திற்குச் சென்று அவரைக் காரிலேற்றிக் கொண்டு எமது ரி.வி.யின் அன்டெனாவைத் திருத்துவதற்கு ஒருவரைத் தேடுவதற்காக யூனியன் பிளேஸ் பக்கம் நோக்கிச் சென்றோம்.

எனது தந்தை காரின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். நான் பின்னாசனத்தில்அமர்ந்திருந்தேன். வாகன நெரிசலில் நாங்கள் குமாரன் ரத்தினம் வீதியிலிருந்து யூனியன் பிளேஸ் வரை மெதுவாகச் சென்றோம்.

குமாரன் ரத்தினம் வீதி சந்தியில் இருவர் செம்மஞ்சள் நிற மோட்டார் சைக்கிள் ஒன்றில் எங்கள் காருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்ததைக் கண்டேன். அவர்கள் எங்களின் வாகனத்தை முந்திச் செல்வதற்கு முயன்றனர். வாகன நெரிசலால் அவர்கள் எங்களின் காரை முந்திச் செல்ல முடியாமல் போய் விட்டது இவர்கள் இருவரும் பச்சை நிற ரீ-சேட்டுக்களை அணிந்திருந்தனர்.

சாரதி ஜகத் சாட்சியமளிக்கையில் கூறியதாவது; சம்பவத்தினத்தன்று பிற்பகல் 3-45 மணியளவில் தனது அன்டெனாவைத் திருத்துவதற்கு சேவியர் என்பவரைச் சந்திக்கப் போவதாக எஸ். பி. என்னிடம் கூறினார்.

சில நிமிடங்களின் பின்னர் எஸ். பி. ஏ. எம். டபிள்யு கட்டடத்திலிருந்து காரை நோக்கி வருவதைக்கண்டேன். பலமுறை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதைக் கேட்டேன். பெரும் சத்தமாக இருந்தது. ஐயோ டடி சுடப்பட்டார் என்று எஸ். பி. யின் மகள் கூச்சலிட்டார். சுட்டவர் ஐந்தடி ஐந்து அங்குல உயரமுடையவர். பச்சை நிற சேர்ட் அணிந்திருந்த அவர் தனது வலது கையிலிருந்த பிஸ்டலினால் சுட்டுவிட்டு கண்ணாஸ்ப்பத்திரி பக்கம் ஓடினார். என்னால் அவரை அடையாளம் காட்டமுடியும்.

வாகன நெரிசலால் துப்பாக்கி நபரைத் துரத்திக் கொண்டு என்னால் ஓட முடியாது போய்விட்டது என்றும்,

முகம் மேல் பார்த்தவாறு எஸ்.பி. நிலத்தில் விழுந்தார். நெற்றியில் காயமொன்றிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. இரு இராணுவத்தினரின் உதவியுடன் நானும் எஸ். பி. யின் மகளும் காயமுற்ற அவரை விபத்துச் சேவைப் பிரிவுக்குக் கொண்டு சென்றோம் என்றும் தனது சாட்சியில் தெரிவித்தார்.

---

### மின்னல் தாக்கி 4பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பில் பத்திரிகை நிறுவனமொன்றில் நேற்று முன் தினம் அதிகாலையில் மின்னல் தாக்கியுள்ளது இதனால் நான்கு ஊழியர்கள் காயமுற்றனர். அத்துடன் பாரிய ஜெனரேட்டர் ஒன்றும் பழுதடைந்துள்ளது.

### கடும் மழைக்கு 8 பேர் பலி

களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்களப் பகுதியில் கடும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவினால் எட்டுப் பேர் புதையுண்டு மரணமானார்கள்.

மூன்று வீடுகள் முற்றாகச்

---

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே

## கோட்ட மட்டத்திலான இன்றைய உதைபந்தாட்டம்

[நமது நிருபர்]

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்டத்திலான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டியின் விபரம் வருமாறு:

கோப்பாய் கல்விக்கோட்டம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் மாலை 3. 00 மணிக்கு 17 வயது பீ பிரிவில் இணுவில் சைவபிரகாசவித்தியாலயம் எதிர் ஹாட்லிக் கல்லூரி. 4.15 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா எதிர் வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் மாலை 3 00 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் விக்னேஸ்வரா கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக்கல்லூரி மாலை 4.15 மணிக்கு 19 வயது பிரி

---

### நினைவஞ்சலி கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை வட்ட அவைப் பிரிவில் இதுவரை காலமும் தமிழீழ மண்மீட்புக்காக போராடி ஆவணி, புரட்டாதி மாதங்களில் மரணித்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 28 ஆம் திகதி தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இரவு 8 00 மணிக்கு நடைபெறும். 18 மாவீரர்களுக்கு நினைவஞ்சலி பருத்தித்துறை வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் தலைமையில் நடைபெறுவதோடு, விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் உரை நிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (82)

### உண்ணா விரதம்

(வடமராட்சி)

தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு உண்ணா விரதத்தின் போது மூத்த விநாயகர் ஆலயத்தில் கரணவாயைச்சேர்ந்த கிருஷ்ணபிள்ளை - செல்வரஞ்சன் என்பவர் கடந்த 24 ஆம் திகதி முதல் இறுதி நாள்வரை நீராகாரமின்றி உண்ணாவிரதமிருந்தார். இவர் இறுதி நாள் மாலிசந்தியில் உண்ணாவிரதம் இருந்து அன்று பிற்பகலுடன் உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டார். (82)

---

முல்லை-மணலாறு பிரதேசத்தில்

## திலீபனின்இறுதிநாள்நிகழ்வு; உணர்வு பூர்வமான எழுச்சி

(முல்லைத்தீவு)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வின் இறுதிநாளான நேற்று முன் தினம் மாபெரும் எழுச்சி தினமாக முல்லைத்தீவு மணலாறு மாவட்டங்களில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது அலங்கார ஊர்திகள் ஊர்வலங்கள் எழுச்சி ஊர்வலங்கள் என்பன மக்களின் பெரும் பங்களிப்புடன் சிறப்புறநடாத்தப்பட்டன. இந்நிகழ்வுகளில் இம்மாவட்டங்களின் நான்கு வட்டங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பங்குகொண்டனர்.

எழுச்சி விழா ஊர்வலம் ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் ஆலய மைதானத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு புளியங்குளம விழா மேடையை சென்றடைந்தது.

இவ்வூர்வலத்தில் வித்தியன் கல்லூரி மாணவர்களின் 'பாண்ட்' வாத்தியக் குழுவினர் முன்னணியில் செல்ல 25 அலங்கார ஊர்திகளின் பவனி இடம்பெற்றது. மாலை 5 00 மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் இரண்டு மைல் தூரத்திலுள்ள விழா மேடையைச் சென்றடைய இரண்டு மணித்தியாலங்கள் பிடித்தன. வீதியின் இருமருங்கிலும் பெருந்தொகையான மக்கள் திரண்டு நின்று ஊர்வலத்தைப் பார்வையிட்டனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் முல்லைத்தீவு, மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழன்பன், கவிஞர் முல்லைமணி திரு. சண்முகநாதன், திருவேதவனம் திரு. சங்கர், மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தீசனா ஆகியோர் உட்பட மேலும் பலர் உரையாற்றினர்.

இவ்விழாவில் முல்லைத்தீவு மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழன்பன் உரையாற்றுகையில் "தியாகங்கள் எல்லை கடந்ததாக இருக்கும் போது அவை புதிய சரித்திரங்கள் ஆகின்றன, அதேபோன்று திலீபனின் ஞாபகார்த்த விழாவானது ஒரு ஞாபகார்த்த விழாவாக இல்லாமல் ஒரு தேசிய விழாவாக தமிழ் மக்கள் கொண்டாடும்பண்டிகைகளில் ஒன்றாக தமீழ அரசுஏற்பட்ட பின்பும் தமிழீழ மக்களின் விழாவாக இருக்க வேண்டும் என்பதே எனது அவா.

அண்ணன் திலீபன் என்ன நோக்கங்களுக்காக தன்னை ஈகம் செய்தானோ அந்நோக்கங்களை இன்று நாம் தொடர்ந்து மேற்கொண்டு இருக்கிறோம்.

இந்திய அரசும் சிறிலங்கா அரசும் தொடர்ந்து தமிழீழ மக்கள் மீதும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன இருந்தாலும் நாம் குனிந்து கொள்வதில்லை. நிமிர்ந்துதான் நிற்கின்றோம் இறந்து வீழ்ந்தாலும் இலட்சியத்தை விட்டுக் கொடோம். இழப்புகளே எம்மை திடப்படுத்துகின்றன என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

---

## சிறிலங்கா பாராளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் கூச்சலிட்டு காரசாரமான வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தை எதிர்க்கட்சிகளின் தரப்பில் முடித்து வைக்க எதிர்க்கட்சி பிரதம கொறடா றிச்சார்ட்பத்திரன உரையாற்றிக் கொண்டிருந்த போதே அமளிதுமளி ஏற்பட்டது

இவர் பேசிக்கொண்டிருந்த போது ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைவதாகவும் விரைவாக பேச்சை முடிக்குமாறு சபாநாயகர் எம். எச் முஹம்மது குறுக்கிட்டார். இதனை ஏற்கமறுத்தபத்திரன தொடர்ந்து உரையாற்றிய போதே ஆளும் கட்சியினர் கூக்குரலிட்டு அதனை குழப்பமுற்பட்டனர். இதனையும் பொருட்படுத்தாது சபாநாயகர் பல தடவைகள் தடுத்தும் பத்திரன தொடர்ந்து உரையாற்றவே அரசதரப்பினரும் எதிர்க்கட்சியினரும் மேசைகளில் அடித்தும் கூக்குரலிட்டதுடன் காரசாரமானவார்த்தைப் பிரயோகங்களையும் பரிமாறிக்கொண்டனர். இதனை அடுத்து பத்திரன பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட பின் ஆளும்கட்சி சார்பில் விவாதத்திற்த பதிலளித்து உரையாற்ற முற்பட்டபோது எதிர்க்கட்சியினர் கூக்குரலிட்டனர் இதற்கு மத்தியிலும் அவர் பேசிக்கொண்டிருந்த போது எதிர்கட்சியினர் அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்த போதே மேற்படி பிரேரணை குரல் வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

---

### கிழக்கில் இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில்கடந்த இரு தினங்களாக இராணுவ நடவடிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தொப்பிக்கல காட்டுப் பகுதியில் பெரும் தாக்குதல்கள ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் அப்பகுதியில் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொள்ளப்படு தாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

---

## கட்சி தலைமைக்கு எதிராக ஐ. தே. க உறுப்பினர் வழக்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிச் செயலாளர், சிறிசேனகூறே, பொருளாளர் ரி. கணேசலிங்கம், தலைவர் டாக்டர் எம். சி எம். சலீம் மற்றும் மூன்று பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் ஒக்டோபர் 5ஆம் திகதி ஆஜராகும்படி மேன் முறையீட்டு நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

காலி மாகாணசபை உறுப்பினர் ரி. ஆர். டி. சில்வாவை கட்சியிலிருந்து வெளியேற்றியது தொடர்பாக சில்வா தாக்கல் செய்த மனுத்தொடர்பாகவே இவர்களை நீதி மன்றத்தில் ஆஜராகும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்சியிலிருந்து தன்னை விலக்கியது சட்டவிரோதமானதென்றும், தன்னை மீண்டும் கட்சியில் அனுமதிக்கும் படியும் சில்வா தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதார் சார்பில் லலித் அத்துலத் முதலி ஆஜராகி

---

## மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை சிவகுரு

[உதவி ஆணையாளர் கமநல திணைக்களம் வடக்கு - கிழக்கு மாகாணசபை திருக்கோணமலை]

வெல்லன் கரவெட்டி மேற்கு கரவெட்டியைச்

கொண்டிருந்தது.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் எனது தந்தையின் கார்ச் சாரதி ஜகத்துடன் 3-45 மணியளவில் தனது அன்டெனாவைத் திருத்துவதற்கு சேவியர் என்பவரைச் சந்திக்கப் போவதாக எஸ். பி. என் சாட்சியில் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே

# கோட்ட மட்டத்திலான இன்றைய உதைபந்தாட்டம்

[நமது நிருபர்]

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்டத்திலான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டியின் விபரம் வருமாறு:

கோப்பாய் கல்விக்கோட்டம் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் மாலை 3. 00 மணிக்கு 17 வயது பீ பிரிவில் இணுவில் சைவப்பிரகாசவித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி. உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானம், மாலை 3.00மணிக்கு 17வயது ஏ பிரிவு அத்தியார் இந்துக்கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம் அத்துடன் இவ் இரு மைதானங்களிலும் 4 10 மணிக்கு 19வயது பிரிவிற்கான உதைபந்தாட்ட போட்டிகளும் இடம் பெறும்.

யாழ். கல்விக் கோட்டத்தில், பரியோவான் கல்லூரி மைதானத்தில் மாலை 3 15 மணிக்கு 17 வயது பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி எதிர் புனித யோசப் வித்தியாலயம். மாலை 4. 30 மணிக்கு 19 வய்து பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்.

வடமராட்சி கல்விக் கோட்டத்தில், டயமன்விளையாட்டு மைகானத்தில் மாலை 3-00 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் ஹாட்லிக் கல்லூரி. 4 15 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா எதிர் வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை. ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் மாலை 3 00 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் விக்னேஸ்வரா கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக்கல்லூரி மாலை 4 15 மணிக்கு 19 வயது பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் தேவரையாளி இந்துக்கல்லூரி.

**கிழக்கில்**

நாட்டிலே சமாதானத்தை நிலை நாட்டி விட்டதாக ஜனாதிபதி பிரேமதாசா கூறுகிறார். அவரது பேச்சுக்கு லேக்ஹவுஸ் பத்திரிகைகளும் ரூபவாஹினியும். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனமும் பெரும் பிரபல்யம் கொடுக்கின்றன. ஆனால், ஜனாதிபதி கூறும் இந்த அமைதியின் கீழ்தான் நீதிமன்றத்திலே பொலிசார் பார்த்துக் கொண்டு நிற்க பெண் ஒருவர் கும்பல் ஒன்றால் கொலை செய்யப்பட்டிருக்கிறார். மோசடி ஒழிப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான தியோபிலஸ் கொழும்பு நகரில் பகலில் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

# கல்கி பாலர்பாடசாலை விளையாட்டுப் போட்டிகள்

கடற்புலிகளின் மகளிர் படை அணி அமைப்பின் லெப்டினன் கல்கி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல்நாவாந்துறை றீகன் நகர் மாவீரர் மண்டப மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இவ்விளையாட்டுப் போட்டியில் மட்டு - அம்பாறை மாவட்ட தொடர்பகப் பொறுப்பாளர் திரு. அருள் தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். பாடசாலைக் கொடியை கடற்புலிகளின் வலிகாமம் பொறுப்பாளர் சங்கீதன் ஏற்றிவைப்பார். வரவேற்புரையை ஜிம்கெலி சனசமூக நிலைய இடைக்காலத் தலைவர் இ. பஞ்சாட்சரம் நிகழ்த்துவார் கடற்புலிகளின் சமூக மேம்பாட்டு பணியக பொறுப்பாளர் செல்வி இன்மொழியின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் திரு. சு. டிவகலாலா கலந்துகொள்வார் அத்துடன் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்வர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

**அவசரகால**

யாகும். லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விமலரத்ன ஆகியோர் கொல்லப்பட்ட பின் இந்நாட்டில் மக்களின் உயிர்களுக்கு பாதுகாப்பில்லை வீடுகளுக்கு வெளியே தலைகாட்ட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது அவசரகாலச் சட்ட விதிகள் அதிகரிக்க அதிகரிக்க விரக்தி நிலையும் அதிகரிக்கின்றது. பிரச்சினைகளும் கூடுகின்றது என்றார்.

## மின்னல் தாக்கி 4பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பில் பத்திரிகை நிறுவன மொன்றில் நேற்று முன் தினம் அதிகாலையில் மின்னல் தாக்கியுள்ளது இதனால் நான்கு ஊழியர்கள் காயமுற்றனர். அத்துடன் பாரிய ஜெனரேட்டர் ஒன்றும் பழுதடைந்துள்ளது.

## கடும் மழைக்கு 8 பேர் பலி

களுத்துறை மாவட்டத்தில் புளத் சிங்களப் பகுதியில் கடும் மழையைத் தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவினால் எட்டுப் பேர் புதையுண்டு மரணமானார்கள்.

மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன இந்த மண் சரிவு நேற்று முன்தினம் இரவு ஏற்பட்டது.

**பாவனைக்கு**

இறைச்சி என்பவற்றை மக்கள் உட்கொள்வதால் வயிற்று நோய்களுக்கு உட்படுவது அவதானிக்கப்பட்டது.

இதனைத் தவிர்க்க யாழ். மாநகரப் பகுதியில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட இறைச்சி விற்பனவு நிலையங்களில் மட்டும் கொள்வனவு செய்யுமாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

**அளவெட்டி**

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி இராணுவத்தினர் மேற்படி பிரதான வீதியிலிருந்து தெற்கு நோக்கி 300 மீற்றர் தூரத்தில் பத்தடிக்குமேல் உயரமுள்ள தகர வேலிகளை அமைத்துள்ளனர்.

நேற்றுக் காலை தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற சிலர் சீனன் கலட்டி பாடசாலைச் சூழலில் இருந்த இரண்டு மேல்மாடி வீடுகள் உட்பட பல வீடுகள் அப்பகுதியில் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகக் கூறினர், இதே வேளை வேலிகள் வெட்டப்பட்டு மதில்கள் உடைக்கப்பட்டு அப்பகுதி இடுகாடு போல் காட்சி அளிப்பதாகவும் வீடுகளின் சீற்கள் களற்றி எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (ச)

மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தை எதிர்க்கட்சிகளின் தரப்பில் முடித்து வைக்க எதிர்க்கட்சி பிரதமது குறுக்கிட்டார். இதனை ஏற்கமறுத்தபத்திரன தொடர்ந்து உரையாற்றிய போதே ஆளும் கட்சியினர் கூக்குரலிட்டு அதனை குழப்பமுற்பட்த்திற்த பதிலளித்து உரையாற்ற முற்பட்டபோது எதிர்க்கட்சியினர் கூக்குரலிட்டனர் இதற்கு மத்தியிலும் அவர் பேசிக்கொண்டிருந்தபோது எதிர்கட்சியினர் அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்த போதே மேற்படி பிரேரணை குரல் வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

# கட்சி தலைமைக்கு எதிராக ஐ. தே. க உறுப்பினர் வழக்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிச் செயலாளர், சிறிசேனகூறே, பொருளாளர் ரி. கணேசலிங்கம், தலைவர் டாக்டர் எம். சி எம். சலீம் மற்றும் மூன்று பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் ஒக்டோபர் 5ஆம் திகதி ஆஜராகும்படி மேன் முறையீட்டு நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

காலி மாகாணசபை உறுப்பினர் ரி. ஆர். டி. சில்வாவை ஐ.தே.கட்சிச் செயற்குழு கட்சியிலிருந்து வெளியேற்றியது தொடர்பாக சில்வா தாக்கல் செய்த மனுத்தொடர்பாகவே இவர்களை நீதி மன்றத்தில் ஆஜராகும்படி ஆணை பிறப்பிககப்பட்டுள்ளது.

கட்சியிலிருந்து தன்னை விலக்கியது சட்டவிரோதமானதென்றும், தன்னை மீண்டும் கட்சியில் அனுமதிக்கும் படியும் சில்வா தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதார் சார்பில் லலித் அத்துலத முதலி ஆஜராகிறார்.

# சுகாதார அமைச்சு அதிகாரிக்கு 'எயிட்ஸ்'

(கொழும்பு)

சுகாதார அமைச்சைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் அந்தரங்கச் செயலாளர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

அறுவைச் சிகிச்சைக்காக கொழும்பு பெரியஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அந்தரங்கச் செயலாளரின் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டபோதே இவர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்த நோயாளி அனுமதிக்கப்பட்டிருந்த அவசர சிகிச்சைப் பிரிவில் தங்கிச்சிகிச்சைபெற்ற அனைத்து நோயாளிகளின் இரத்தமும் பரிசோதனை செய்யப்படவுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எயிட்ஸ் நோயாளி இப்போது ஆஸ்பத்திரியில் பிரத்தியேகமான ஒரு அறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

**வேலை**

குறைபாடுகளை எழுதி மினிட் புத்தகத்தைத் தோட்டத் துரையிடம் சமர்ப்பித்தபோது அவர் அதனை ஏற்க மறுத்தாராம் அதனை ஆட்சேபித்து மேற்படி தலைவர் சம்சன் ஹேவகே 50 அடி உயர தென்னை மரத்திலேறி ஐந்து மணி நேரம் இருந்து தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார். இதனைத்தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்து வந்த தோட்டத் துரையும் பொலிசாரும் இவரை இறங்குமாறு வேண்டுகோள் விடுத்தும் அவர் மறுத்துள்ளார் பின் அங்கு வந்த பிரதேச சபை உறுப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்கியே இவர் இறங்கினராம்.

இதனை அடுத்து மக்கள் அவ்விடத்தில் கூடி துரைக்கெதிராகக் கோஷமிடவே பொலிஸார் தடியடிப்பிரயோகம் செய்துள்ளனர். இதனால் ஒரு பெண் காயமடைந்ததே இவ்வேலை நிறுத்தத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**காயங்கேணி**

னாவை இராணுவத் தலைமைப்பீடம் நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக லெப்டினன்ட் தர அதிகாரி மீது சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**நெஸ்பிறே**

நோயாளர்கள் ஊட்டச்சத்தைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் நெஸ்பிறே பால்மா வகைகளை குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண. பி எம். இம்மனுவேல் அடிகளார் வழங்கி வருகிறார்.

**ராணுவ**

லுக்கு இராணுவ அதிகாரிமீது விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றமை என்பன இவ் அதிருப்திக்குக் காரணம் என அவர் தெரிவிக்கின்றார்.

இராணுவ உயர்மட்டம் ஏற்படும்தவறுகளுக்கெல்லாம் தமக்குக் கீழ் பணிபுரியும் அதிகாரிகள் மீது பழியைப் போடுவதாகவும் விசாரணை நடாத்துவதாகவும் சில இராணுவ அதிகாரிகள் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந் [...] இராணுவ நடவடிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தொப்பிக்கல காட்டுப் பகுதியில் பெரும் தாக்குதல்கள ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் அப்பகுதியில் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொள்ளப்படு[...] தாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை சிவகுரு

[உதவி ஆணையாளர் கமநல திணைக்களம்
வடக்கு - கிழக்கு மாகாணசபை திருக்கோணமலை]

வெல்லன் கரவெட்டி மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவகுரு (உதவி ஆணையாளர் கமநல திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாண சபை, திருக்கோணமலை] 24 - 09 - 92 அன்று திருக்கோணமலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னாச்சியின் அன்புமகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் செல்லம்மாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னாச்சியின் அன்பு மருமகனும், பார்வதியின் அன்புக் கணவரும், சிதம்பரநாதன் (க. நெ. ப. நோ. கூ. சங்கம்), சாந்தினி, ஜெயகாந்தன், ஜெயமோகன், மதனரூபன், காலஞ்சென்ற ராஜ்மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ம. ஜெகநாதன் (தொலைத் தொடர்புத் திணைக்களம் க. நெ. ப. நோ. கூ. சங்கத் தலைவர்), நேசகுமாரி ஆகியோரின் மாமனாரும், சஞ்சீவன், இலக்கியா, அர்ச்சனா, கோபி சங்கர் ஆகியோரின் பேரனும், சி. மயில்வாகனம், சி. செல்லையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் (28 - 09 - 92) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் கரவெட்டி சோனப்பு மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. ஜெகநாதன்
(மருமகன்)

[3286]

# உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 27-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5875

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
40-2397, 24-5137, 26-5882, 41-9855, 42-3726, 40-7207, 27-8999, 28-6853, 27-7711, 24-4361, 27-7952, 22-1647, 28-3007, 24-6448, 40-7299, 24-2686, 27-2089.

வட பகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
27-8155, 27-6528, 27-2004 24-5509, 27-7750 27-9083, 27-2016, 26 1169 26 5563 40-2573, 26-4510, 41-2383, 42-0488, 26-4393, 24-9490, 40 5015.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம்28 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது